**Deposition of Witness**
(Chapter XXIII Code of Criminal Procedure)

| | |
|---|---|
| IN THE COURT OF | ASSISTANT SESSIONS JUDGE,<br>KULITHALAI. |
| Calendar | |
| Miscellaneous | |
| Sessions | Case No.**S.C. 76 / 2017** |
| Deposition of Witness for | Prosecution அ.சா.2<br><br>Defense<br>Court |
| Name | ஏழுமலை |
| Father's Name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.08.2026 | |

எதிரிகள் - ஆஜர்

முதல் விசாரணை

நான் தற்பொழுது லாலாபேட்டையில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1-ஐ தெரியும், எதிரிகளை தெரியாது. வழக்கை பற்றி எனக்குஎதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளிற்கு இணங்க சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்ககோரி அனுமதியின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

போலீசார் என்னை விசாரித்தாகவும், போலீசார் விசாரணையில் நான் கடந்த 17.01.2017ம் தேதி பஸ் ஸ்டாப்பில் நின்றுகொண்டியிருந்தேன் என்றும், அப்பொழுது அ.சா.1 மற்றும் மோகன் ஆகியோர்கள் மதியம் 2.00 மணியளவில் பாலகிருஷ்ணன் (அ.சா.1) பணத்தை எண்ணிக்கொண்டியிருந்ததாகவும், கரூர் - திருச்சி செல்லும்சாலையில் சந்தைபேட்டை அருகே TN 52 D 8250 என்கின்ற இருசக்கர வாகனத்தில் இரண்டு நபர்கள் வந்தார்கள் என்றும், அவர்கள் அ.சா.1 பார்த்து வக்கீலை பார்க்கபோகவேண்டும் பணம் இருந்தா கொடுடா என்று சொல்லியும், அவர் கொடுக்கமுடியாது என்று கூற அப்பொழுது அதில் இருந்த ஒரு நபர் கையில் வைத்திருந்த அருவாளால் அ.சா.1 கையில் வெட்டினார் என்றும், அதில் அவருக்கு இரத்த காயம் ஏற்பட்டதாகவும், அவர் பையில் இருந்த ரூ.1200/- பறித்து கொண்டார் என்றும், பின்னர் மேற்படி இரண்டு பேரும் எங்களை பார்த்து யாரும் பக்கத்தில் வந்தால் அவர்களையும் வெட்டி கொன்றுவிடுவோம் என்றும், பின்னர் அருவானை தலைக்குமேல் தூக்கி வைத்து பக்கத்தில் யார் வந்தாலும், வெட்டி கொன்றுவிடுவோம் என்று மிரட்டியதாகவும், அதனால் பஸ் நிறுத்தத்தில் நின்று நபர்கள் சிதறி ஓடினார்கள் என்றும், போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்பொழுது எனக்கே தெரிந்த காரணங்களுக்காக எதிரிகளை காப்பாற்ற வேண்டும் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை - இல்லை.

மறுவிசாரணை இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

MUTHUSAMY ESWARAN

Digitally signed by MUTHUSAMY ESWARAN
Date: 2026.08.10 18:05:40 +0530

சார்பு நீதிபதி

குளித்தலை.